**DEPOSITIONS OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE TIRUPPUR**

**CASE No** :SC 12/2023

Deposition of witness for PW 1 — Prosecution Witness 1
Defence
Name : Karthikeyan — Court ASJ

Father Name : Kannaiyan
Village
Taluk
Caste
Calling
Religion
Age

Solemnly afirmed in accordance with the provisions of act X of 1873 of the day of 18.04.2023.

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் காங்கேயம் ரோடு மணியக்கார பாளையம் 3 வது வீதி கதவு எண் 33/34 ல் குடியிருந்து வருகிறேன். நான் பனியன் கம்பெனியில் ஐயனிங் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2021 தேதி இரவு 8 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது சுவன்ராஜ் எனக்கு போன் செய்து என்னை வீட்டில் இருந்து வெளியே அழைத்தார். சாட்சியை எதிரியை சுவன்ராஜை அடையாளம் காட்ட சொன்னபோது நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த மஞ்சள் சட்டை அணிந்து இருந்து சுவன்ராஜ் என்று தெரிவித்தார். 2021 க்கும் 1 வருடத்திற்கு முன்னர் சமூக நீதி கட்சியில் மாவட்ட துணை தலைவராகஇருந்தார். அந்த சமயத்தில் எனக்கு அறிமுகம் ஆனார். பஞ்சமி நிலையத்தி மீட்டு தாள்தப்பட்ட சமுதாயத்திற்கு எடுத்து தருவதாக சொன்னார். எங்கள் பகுதியில் உள்ள நபர்களிடமும் அவரை அறிமுகம் செய்து வைத்து அவர்களிடமிருந்து இருப்பிட சான்றிதழும் வருமான சான்றிதழும் பெற்று நிலையத்தை மீட்டு தருவதாக சொன்னார். அதற்காகநான் ஊர் பொது மக்கள் 60 நபர்களிடமிருந்து தலா ரூ800 வாங்கி கொடுத்தேன். அதற்கு பின்னிட்டு 3 மாதங்களாக எங்கள் பணிக்கு வரவே இல்லை. போன் செய்தும் போன் எடுக்கவில்லை. எங்கள் பகுதி மக்கள் இருப்பிடசான்றிதழ் வருமான சான்றிதழ் வாங்கி தருவதாக சொல்லி பணம் வாங்கியதால் பணத்தை திருப்பி

தருமாறு என்னிடம் கேட்டார்கள். அதுசம்மந்தமாக சமூக நீதிகட்சியின் மாவட்ட தலைவர் வீரசாமியும் 1ம் எதிரி சுவன்ராஜ் வீட்டிற்கு சென்றோம். நாங்கள் சென்ற போது அவர் வீட்டில் இல்லை. வீட்டில் அவருடைய மனைவியும் அம்மா மட்டும இருந்தாகள். அவர்களிடம் சுவன்ராஜ் பணத்தை வாங்கிய விசயத்தை சொல்லிவிட்டு வந்தோம். அதற்கு பிறகு 3 நாள் கழித்து 20.12.2021 இரவு 8 மணிக்கு சுவன்ராஜ் எனக்கு போன் செய்து வெளியே வரசொன்னார். நான் வெளியே சென்றபோது ஊத்துக்குளி ரோடு மன்னரை ரோடு உள்ள ஒயின் ஷாப்புக்கு அழைத்து சென்றார். அவருடம் மதன் அஜய் குமார் மற்றும் பழனி உடன் இருந்தார்கள். அவர்கள் சுவன்ராஜ் ன் நண்பர்கள். இன்று நீதிமன்றத்தில் அஜராகியுள்ள 2ம் எதிரி பெயர் பழனி. 3 வது நிர்பவர் அஜய்குமார். 4 வதாக நிர்பவர் மதன் அவர்களும் உடன் வந்து இருந்தார்கள். நாங்கள் 5 பேரும் சென்று ஒயின் ஷாபில் சரக்கு அடித்தோம். நான் வீட்டிற் கு செல்லாம் என்று கிளம்பிய போது ஒயின் ஷாபில் 100 மீட்டர் தள்ளி மன்னரை– மணியக்கார ரோட்டில் கருப்பசாமி கோவில் அருகே 4 பேர் சேர்ந்து வழி மறைத்தார்கள். அப்போது சுவன் ராஜ் வீட்டில் போய் சத்தம் போடஅளவிற்கு பெரிய ஆள் ஆயிட்டயா என்று தேவிடியா மகனே கண்டாரோழி மகனே என்று சொல்லி பின்னால் மடக்கி வைத்து இருந்த அருள்வாலை எடுத்து என்னுடைய தலையை வெட்ட வந்தார் நான் தடுப்பதற்காக முகதிற்கு நேராக கையை நீட்டிய போது அருள்வால் என்னுடைய கையில் பட்டு இடது கை கட்டை விரல் துண்டாகி விட்டது. மீண்டும் வெட்ட வந்த போது தடுத்த போது வலது கை உள்ளங்கையில் பட்டு கட்டைவிரலில் வெட்டு காயம் ஏற்பட்டு விட்டது. அப்போது பழனி கையில் வைத்து இருந்த அருள்வாளால் வீட்டில் செல்லும அளவிற்கு பெரிய ஆள் ஆயிட்டயா புண்டா மகனே என்று சொல்லி அருள்வாளால் என்னுடைய தலையில் பின் பக்கம் வெட்டினார். நான் அப்போது கீழே விழுந்து விட்டேன். மீண்டும் எழுந்து ஓடிய போது பழனி அருவாலாள் என்னுடைய வலது கால் முட்டியில் வெட்டினார். அப்போது நான் எழுந்த ஓட முயற்சித்தபோது அஜய் மற்றும் மதன் சேர்ந்து என்னை வயிற்றிலும் முகத்திலும் கொலை வெறியோடு கையால் குத்தினார்கள். அப்போது வழி தாங்காமல் நான் கத்தியபோது ்அந்த வழியாக வந்த குனசேகரன் மற்றும் 4–5 பேர் சேர்ந்து என்னை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். ஆட்கள் வருவதை பார்த்தவுடன் எதிரிகள் ஓடிவிட்டார்கள். என்னை திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக் சேர்த்தார்கள். நான்

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசார் வாக்கு மூலம் பதிவு செய்தார்கள். அதை என்னிடம் படித்து காட்டினார்கள். சரியாக இருந்தது நான் கைரேகை வைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலம் என்னுடையது தான். புகார் வாக்கு மூலம் அரசு தரப்பில் அ.த.சா.ஆ 1 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. புகார் வாக்கு மூலம் வாங்கியபோது என்னுடன் என்னுடைய தம்பி பிரதாப் உடன் இருந்தார். இந்த வழக்கு சம்மந்தமான போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.04.18 18:20:34 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.